ஸ்ரீ:
ஸ்ரீமதேராமாநுஜாயநம:

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி ௬. சுக்கிலஞு மார்கழிமீ பகுதி ௰௨.
Vol 6. *December & January 1929-30.* No. 12.

நம்பிள்ளை வைபவம்.

(262-ம் பக்கத்தொடர்ச்சி.)

ஓர் அம்மையாரின் அருஞ் செயல்.

பின் பொருகால் நம்பிள்ளை திருவெள்ளறை நாய்ச்சியாரைச் சென்று சேவிப்பதாக வெழுந்தருளினர். ஸ்ரீபாதத்து முதலிகளும் உடன் சென்றனர். அனைவரும் அவ்வாறே சென்று நாய்ச்சியாரைச் சேவித்து மீண்டு திருவரங்கம் திருக்கோயிலை நோக்கி எழுந்தருள் வாராயினர். அப்பொழுது "கொண்டல் குமுறுங்குடகிழிந்து மதகுந்தியகில் கொண்டு நுரை மண்டிவருநீரி" னையுடைய காவிரியாறானது "தடவரையதிரத்தரணி விண்டிடியத் தலைப்பற்றிக் கரை மரஞ்சாடிக் கடலினைக் கலங்கக் கடிதிழிகங்கை" போலே இருகரையும் ஒருகரையாய் மிக்க மிடுக்குடன் பெருக்கெடுத்துச் சென்றது. அவர்கள் அதனைக் கடந்து கோயிலுக்கெழுந்தருள வேண்டியிருந்தது. ஓடமொன்றுங் கிடைத்திலது. ஒரு தாழிமாத்திரமே யிருந்தது. பொழுதோ இருட்டுஞ் சமயமாயிற்று. ஆதலால் எல்லோரும் ஒரே தாழியில் ஏறிக்கொண்டனர். தாழியும் மெல்ல நகர்ந்து சென்றது. நட்டாற்றிற் செல்லவே பொழுதும் இருட்டி விட்டது. மழைக்காவிருட்டானதால் நக்ஷத்திர வொளியுமில்லையாயிற்று. அக்கரை இக்கரை தெரியவில்லை. திசைதடுமாற்ற மேற்பட்டது. அலைகளின்

விசையாலும் பாரந்தாங்காமையாலுந் தாழியுந் தத்தளித்து அமிழத் தொடங்கிற்று. 'இந்நிலையில் நாலிரண்டு பேர் தாழியை விட்டிழிந் தால் தாழிகரை சேரலாம்; ஒருவரும் விடாதிருந்தால் நம்பிள்ளை முதலிய அனைவரும் தாழியோடு அமிழ்ந்து போகநேரும்' என்று தாழிக்காரன் கூக்குரலிட்டான். இடமோ நட்டாறு; அதிலும் அளவு கடந்த வெள்ளம்; கொள்ளிக்கும் விள்ளாத கூரிருள்; திசையோ தெரியவில்லை; தாழியினின்றுங் குதிப்பது உண்மையில் எமன் வாயிற் குதிப்பதுதான்; இந்நிலையில் எவர்தாம் இதுசெய்தற்கு மனந் துணிவர்? சாதலினின்னாததில்லை யன்றோ? உயிரிருந்தால் உப்பு மாறியும் உண்ணலாமே? ஆதலால் எல்லார்க்குந் தம்முயிர் சர்க்கரை தானே. ஆகவே தாழியைவிட எவரும் இசையாதிருந்ததில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. ஆனால் ஒருவரும் இறங்காதிருக்கில் எல்லோருக்கும் ஒருங்கே மரணமன்றோ கிட்டும்? உலைப்பாண்டத்தில் வெம்புவது நல்லதோ? அடுப்பிற் குதிப்பது நல்லதோ? ஐயோ பரிதாபம்! இந்நிலையில் அவர்கள் மனம் என்னபாடு தான் பட்டிருக்கும்; ஒருவரை யொருவர் பார்த்தனர்; ஒன்றுந் தோன்றாது அனைவரும் ஒருங்கே திகைப்புற்றனர்; முன்னும் பின்னும் ஓடவில்லை; இருதலைக் கொள்ளியினிடையில் அகப்பட்ட எறும்புபோல் தத்தளித்தனர்; "வந்ததே ஆழ்கலத்தன்னகவி" என்பரன்றோ கவிவாணர்களும்?

இந்நிலையில் ஸாத்விகையான ஓரம்மையார் தாழிக்காரனை நோக்கி 'உலகங்கட்கெல்லாம் ஒருயிர் போன்ற நம்பிள்ளையைப் பேணிக்கொண்டுபோய்க் கரையிலேவிடு; நூறுபிராயம்புகுவாய்' என்று கூறி அவனை ஆசிர்வதித்து, பேரிருளென்றும் பெருக்காறென்றும் பாராமல் தமது உயிரையும் பொருட்படுத்தாது ஆற்று வெள்ளத்தில் வீழ்ந்தாள். என்னே அம்மையாரின் தியாகபுத்தி! அவரது ஆசார்யபக்திதானென்னே!! ஆசார்யபக்தியாம் பெருவெள்ளத்தில் மூழ்கிய அவ்வம்மையார்க்கு அவ்வாற்று வெள்ளம் சிறுதுளியாய்த் தோன்றிற்றுப் போலும்; அவரது ஞானவொளிதிகழும் அகக்கண்ணுக்கு முன் அப்பேரிருள் தான் எவ்வாறச்ச முறுத்தும்? சாகத்துணிந்தவர்க்குச் சமுத்திரமும் முழங்காலளவுதானே. உடம்பின் பயன் கொண்டார் கூற்றம் வருங்காற் பரிவரோ? மெய்ப்பயன் கொண்டார் இவ்வுடற்சுமையைப் போடுதற்கு மனஞ்சுளியாரன்றோ?

உலகத்தில் மரணமென்பது எல்லோர்க்கும் மாற்றவியலாதமைந்த தொன்றேனும் சிலபெரியோர் அதனையும் பயனுடையதாக்கிக் கொள்வர். * "அன்பிலாரெல்லாந் தமக்குரியரன்புடையார், என்பு முரியர் பிறர்க்கு" என்னும் முதுமொழிக்கிலக்காக § ததீசி முதலியோர் பரோபகாரத்தின் பொருட்டுத் தேகத்தை விட்டனர். † சடாயு பக

---

* அன்பிலார் எல்லாம் தமக்குரியர்—அன்பில்லாதார் (பிறர்க்குப் பயன்படாமையின்) எல்லாப்பொருள்களாலும் தமக்கேயுரியர். அன்புடையார் என்பும் பிறர்க்கு உரியர்—அன்புடையார் அவற்றால் மாத்திரமன்றித் தம்முடம்பாலும் பிறர்க்குரியர். இவ்வுண்மை சிபி முதலியோர்பாற் காண்க.

§ ததீசி, இவர் அதர்வா என்னும் முனிவர்க்குச் சாந்தியிட முதித்த குமாரர். இவர்க்குத் தத்யங்கர் எனவும் பெயருண்டு. இவர்க்குக் குதிரை முகம் என்பர். மிக்க விரத வொழுக்க முடையார். துவஷ்டாவுக்கு நாராயண கவசமுபதேசித்தவர். மிக்க அருள்படைத்தவர் முன்பு தேவரும் முனிவரும் சேர்ந்து திருப்பாற்கடலைக் கடையத்தொடங்குகையில் திருமால் அவர்களது ஆயுதங்களை வாங்கி இம்முனிவரிடம் வைத்தனர். இவர் அவற்றை நெடுநாள் வைத்திருந்தும் ஒருவரும் அவற்றைக் கேட்கவாராமையால் அவற்றையெல்லாம் விழுங்கலாயினர். அவைகளெல்லாம் ஒன்றாய்த் திரண்டு இவரது முதுகந்தண்டைச் சேர்ந்திருந்தன. பின்பு இந்திரன் விருத்திரன் முதலிய அசுரர்களை வெல்லும் பொருட்டு இவ்விடம் வந்து அம்முதுகெலும்பைக்கேட்ட இவர் தேவர்களின் நன்மையின் பொருட்டுத் தம்முயிரையும் பொருட்படுத்தாமல் அதனை யுதவினர்.

† சடாயு, அருணனுக்குச் சேதியிடம் பிறந்தவர். (சேநி யெனவுங் கூறுவர்.) சம்பாதியின் தம்பி. தசரத சக்ரவர்த்தியின் தோழர். ஸ்ரீராமபிரான் காடுறைந்த காலத்தில் அவரைக் கண்டு தசரதர் நிலைகேட்டு அளவளாவித் தசரதர் பக்கல் தமக்குள்ள தோழமையை யறிவித்து அவர்களிடம் புத்திரவாஞ்சை வைத்தவர். பின் இராவணன் பிராட்டியை யெடுத்துச்செல்கையில் பிராட்டியின் கூக்குரலைக் கேட்டு முன்வந்து அவர்கட்கு அபயமளித்து அரக்கனை மடக்கிக்கொண்டு அவனுடன் கடும்போர் புரிந்தனர். பின் அவனெறிந்த வச்சிரப்படையால் வலிகுன்றி இராமபிரான் தம்மைக் காணுமளவும் உயிர் தாங்கியிருந்து அங்கே பிராட்டியைத் தேடிக்கொண்டு வந்த இராம லக்ஷ்மணர்கட்கு இராவணன் பிராட்டியை யெடுத்துச் சென்றமை கூறிப்பின் உயிர் நீத்தனர். ஸ்ரீராமபிரான் இவரைப் பரும்மமேதத்தால் ஸம்ஸ்கரித்தனர் என்பர்.

"சரணெனக்கார்கொலென்றுசானகியழுதுசாம்ப
அரணுனக்காவன்வஞ்சியஞ்சலென்றருளினெய்தி

வத் கைங்கர்யத்தில் தம்முயிரை வழங்கினார். இவர்களது % பூத வுடம்பழியினும் ¶ புகழுடம்பு இன்றும் நிலைத்துளதன்றோ! இப் பேறு சாமான்யர்க்குக் கிட்டுவதொன்றோ! * "நத்தம் போற்கேடும் உளவாடும் சாக்காடும், வித்தகர்க்கல்லாலரிது" என்பது பொய்யா மொழியன்றோ? இதுநிற்க,

தாழியும் ஒருவாறு தத்தளித்து நம்பெருமாள் திருவருளரு ளாற் கரைசேர்ந்தது. அம்மையாரின் அருஞ்செயலைக்கண்டு திகைத் தனர் சிலர். இப்படியும் ஒரு நிலை வாய்த்ததே! என்று வியந்தனர் சிலர். இதுவன்றோ ஆசார்ய நிஷ்டை! என்று புகழ்ந்தனர் சிலர். பேரருளாளரான பிள்ளையும், என்னே! நம்பொருட்டு இவ்வம்மை யார் உயிரையன்றோ பரிமாறினார். இப்படியும் ஓரதிகார விசேஷ மிருந்ததே! என்று மிகவும் திருவுள்ளத்தில் வியாகுலப்பட்டுப் பல வாறருளிச்செய்பலாயினர்.

"ஒன்றைநினைக்கின துவொழிந்திட்டொன்றாகும்
அன்றிய துவரினும்வந்தெய்தும்—ஒன்றை
நினையாதமுன்வந்துநிற்பினுநிற்கும்
எனையாளு மீசன் செயல்"

மூரணுடைக்கொடியோன்கொலமெய்யமர்முடித்துத்தெய்வ
மாணமென்தாதைபெற்றதென்வயின்வழக்கன்றாமோ"

என்று பெருமாள் அருளிச்செய்ததுங்காண்க.

% பூதவுடம்பு—பஞ்சபூதங்களாலாய இவ்வுடம்பு.

¶ புகழுடம்பு—புகழாகிய வுடம்பு. (தனக்குப்பின் நிற்கும் கீர்த்தி.)

* நத்தம் (ஆகும்) கேடும்—புகழுடம்பிற்கு ஆக்கமாகுங்கேடும், உள தாகும் சாக்காடும்—புகழுடம்புளதாகுஞ் சாக்காடும், வித்தகர்க்கல்லால் அரிது—சதுரப்பாடுடையார்க்கல்லதில்லை; எ-று.

நந்துதல்—மிகுதல்; நந்து என்பது நத்து என்றாகிப்பின் அம் என்னும் விகுதி பெற்று நத்தம் என நின்றது. போல் என்பதுஅசை. சாக்காடு—மா ணம். புகழுடம்பு வளரப் பூதவுடம்புமெலிதலும், புகழுடம்பு நிற்கப் பூதவுடம்பு இறத்தலும் சதுரப்பாடுடைய பெரியோர்க்கல்லதில்லை யென்பதாம். "ஒன்று தேய்தல் ஒன்று வளர்தலன்றோ" என்ற பிள்ளை திருவாக்கும் இங்கு நோக்கத் தக்கது.

என்றபடி எல்லாம் தெய்வச் செயலேயன்றோ? நாமொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைத்ததென்பது அடிப்பட்ட உலக வழக்கன்றோ? அன்றியும் ஆசார்யபக்தியால் ஆற்றிலிழிந்த அம்மையாரைக் காத்தருள்வது பெருங்கருணைத் தடங்கடலாகிய கடல் வண்ணன் கடமையன்றோ? இப்படிப்பட்ட சந்தர்ப்பத்திலுங் கைவிட்டால் உலகோடும் உயிர்களோடும் அவனுக்குள்ள உரிமை எவ்வாறு வலியுறும்? "மூலமே யென்ற் கரிமுன் வந்திடர் தொலைத்து, நீலமேகம் போல நின்ற"துவும் "எங்குமுளன் கண்ணனென்ற மகனைக் காய்ந்து, இங்கில்லையாலென்றிரணியன் தூண்புடைப்ப, அங்கப் பொழுதே அவன் வீயத் தோன்றிய"துவும் அதன் பொருட்டேயன்றோ?

அவ்வாறே அம்மையாரையுங் காக்கத் திருவுள்ள மிருந்தமையால் ஆற்றிலிழிந்த அம்மையாருக்கு நடுவே ஒரு திடர் சந்தித்தது. அவரும் அதிலே நிலைத்துநின்றனர். கரை ஸமீபமாகையாலும் இராக்குரலாகையாலும் பிள்ளை வருத்தத்தோடு கூறியருளும் வார்த்தைகள் அவர் காதிற் பட்டன. அதுகேட்டு அம்மையார் 'ஸ்வாமீ! தேவரீர் வ்யாகுலப்படவேண்டா; அடியேன் இங்கே இருக்கிறேன்' என்று குரல் காட்டினர். அதனைத் திருச்செவி சாய்த்த பிள்ளையும் திடர்கள் மரங்கள் சந்தித்தன போலும் என்று திருவுள்ளம் பற்றி மிகவும் உகந்தருளித் தாழிக்காரனையிட்டு அவரைக் கரையிலே யழைத்து வரப் பணித்தனர். அவனும் அவ்வாறே சென்று இட்டுக்கொண்டு வந்து கரை சேர்த்தனன். அம்மையாரும் வந்து பிள்ளை திருவடிகளிலே தெண்டனிட்டு நின்று ஆசார்யனை யல்லது வேறு புகலிடமறியாதவளாதலால் அவரை நோக்கி 'அடியாள் ஆற்றிலே யொழுகிப் போம்போது, தேவரீர் அங்கே ஒரு கோரைமேடாய் வந்து காத்தருளிற்றோ' வென்று பணிவுடன் பகர்ந்தனர். பிள்ளையும் அது கேட்டு 'உமமுடைய விச்வாசமிதுவான பின்பு அதுவும் அப்படியாகாதோ' வென்று கூறியருளினர்.

இதனால் தம் உடல் பொருள் ஆவிகளை யழியமாறியாகிலும் ஆசார்யனைப் பேண வேணுமென்பதும், அந்நிலையுண்டாகவே எம்பெருமான் அவனைப் பேணிக் காத்தருளும் என்பதும் தெளிவாய் விளங்குகின்றன.

† "மந்திரமும்தேவும்மருந்துங்குருவருளும்
தந்திரமும்ஞானந்தருமுறையும்—எந்திரமும்
மெய்யென்னில்மெய்யாய்விளங்குமேமேதினியில்
பொய்யென்னிற்பொய்யாகிப்போம்.'' (நீதிவெண்பா)

* "பொருளுமுயிருமுடம்பும் புகலும்,
தெருளுங்குணமுஞ்செயலும்—அருள்புரிந்த
தன்னாரியன்பொருட்டாச்சங்கற்பம்செய்பவர்நெஞ்சு
எந்நாளும்மாலுக்கிடம். (ஞானஸாரம்.)

வீட்டலேகுக்குச் சீட்டேப் பெற்றது.

பின்பு பிள்ளையும் ஸ்ரீபாதத்து முதலிகளுமாகக் கோயிலில் எழுந்தருளியிருந்து தர்சனம் நிர்வஹித்துக்கொண்டு வாழ்ந்தருளுங் காலத்தில் பிள்ளை திருவடிகளைப்பற்றியிருப்பவளாகிய ஓரம்மை யாருக்குப் பிள்ளை திருமாளிகைக்கருகில் ஒரு கோலளவு மனையிட மிருந்தது.

ஒரு ஸ்ரீவைஷ்ணவர் அவ்வம்மையாரைநோக்கிப் 'பிள்ளை திரு மாளிகை நெருக்கமாயிருக்கிறது; இந்த ஒருகோல் மனையிடத்தை

---

† தேவு—தெய்வம் தந்திரம்—மந்திரத்தை யநுசரித்த அங்கந்யாஸ முதலிய செய்ம்முறைகள். எந்திரம் மந்திரமேற்றப் பெற்ற (சக்கரமமைந்த) தகடு. இவையெல்லாம் நம்புதலுடையார்க்கு மெய்யாய் நின்று பலிக்கும். நம்பாதவர்க்குப் பொய்யாய்ப் பயனிலவாம் என்பதாம்.

* பொருளும்—தாம்பெற்ற செல்வங்களும், உயிரும்—தம்முயிரும், உடம்பும்—தம்முடைய சரீரமும், புகலும்—தம்முடைய இருகமும், தெருளும்—தம்முடைய ஞானமும், குணமும்—சமம் முதலிய குணங்களும், செயலும்—செய்கைகளும், (ஆகிய இவற்றை யெல்லாம்) அருள் புரிந்த—ஒரு காரணமுமின்றியும் தன்னருளைப்பண்ணித் தம்மை யங்கீகரித்தருளிய, தன்னாரியன் பொருட்டா—தம்முடைய ஆசார்யன் பொருட்டாக, (அவ னுடைமைகளாக வென்றபடி) சங்கற்பம் செய்பவர் நெஞ்சு—நிச்சயித்திருப் பவர்களுடைய மனம், எந்நாளும் மாலுக்கு இடம்—எக்காலமும் திருமாலுக்கு உறைவிடமாம். (எ-று)

தம்முடல் பொருளாவி முதலியவற்றை ஆசாரியனுடைமைகளாகக்கருதி யிருப்பவர் மனம் திருமாலுக்கு எப்பொழுதும் உறைவிடமாம். பெருமாள் அவர் மனத்தில் நித்யவாசஞ் செய்தருளுவர் என்பதாம்.

யும் அவருக்குச் சமர்ப்பியும்' என்று பலமுறையுங் கூறினர். அதற்கு அவ்வம்மையாரும் 'திருவரங்கர் திருக்கோயிலிலே ஒருகோல் நிலம் எவர்க்குக்கிடைக்கும்? அடியேன் திருவடிச்சாருமளவும் கொடேன்' என்று மறுதளித்து வந்தனர். அந்த ஸ்ரீவைஷ்ணவர் இச்செய்தியைப் பிள்ளை ஸந்நிதியில் விண்ணப்பம் செய்தனர். பிள்ளையும் அதுகேட்டு அம்மையாரை யழைப்பித்தருளி அவரை நோக்கி ஏகாங்கியாகிய உமக்குச் சிறிதிடமன்றோ வேண்டுவது? இவ்விடம் முதலிகள் எழுந்தருளியிருக்க நெருக்கமாயிருக்கிறது. உமது ஒருகோல் மனையையும் நமக்குத் தருவீர் என்றனர். அதுகேட்ட அம்மையாரும் 'அப்படியே செய்கிறேன்; தேவரீர் பரமபதத்திலே அடியேனுக்கு ஒருகோல் நிலம் தந்தருளவேணும்' என்று விண்ணப்பித்தனர். பிள்ளையும் அதுகேட்டு முறுவலித்தருளி அதற்கு ஸ்ரீவைகுண்டநாதனன்றோ கடவன்; அவனுக்கு விண்ணப்பஞ்செய்துகொண்டு தருகிறோமென்றருளிச் செய்தனர். அவ்வம்மையாரும், 'அடியேன் ஸாது; அதிலும் பெண்பெண்டாட்டி; ஆதலால் தருகிறோமென்ற சொல் மட்டும் போராது; எழுதித் தந்தருளவேணும்' என்றனர். அதுகேட்ட பிள்ளையும் இப்படியும் கேட்பதே! என்று திருவுள்ளம் மிகவும் உகந்தருளி "இன்ன வருஷம் இன்ன மாஸம் இன்ன தேதியில் இந்த அம்மையாருக்குத் திருக்கலிகன்றி தாஸன் பரமபதத்திலே ஒருகோல் நிலம் எழுதிக்கொடுத்தான்; † அகிலலோகஸ்வாமியும் * அஸ்மத்ஸ்வாமியுமான ஸ்ரீ வைகுண்டநாதன் விலை செலுத்திக்கொடுத்தருளவேணும்" என்று § ஆவணம் எழுதித் தம்முடைய ¶ திருக்கைச்சாத்திட்டுக் கொடுத்தருளினர். அம்மையாரும் திருமுகத்தை, தெண்டனிட்டுப் பேரன்போடு வாங்கித் தலையிலும் கண்களிலும் ஒற்றிக்கொண்டு தீர்த்த ப்ரஸாதங்களும் ஸ்வீகரித்து அன்றும் மறுநாளும் பிள்ளையைச் சேவித்துக்கொண்டிருந்து மூன்றாம் நாளிலே பரமபதம் சேர்ந்தாள். என்னே! இவ்வம்மையாரின் நம்பிக்கை. அவரது உறுதிப்பாடுதான் என்னே! பிள்ளையின் பெருமைதானென்னே!

---

† அகிலலோகஸ்வாமி—எல்லாவுலகுமுடையான்.

* அஸ்மத்ஸ்வாமி—என்னையுடையான்.

§ ஆவணம்—ஓலைமுறி. ¶ கைச்சாத்து—கையெழுத்து.

இதனுல், ஆசாரியன் இரங்கி அருளியதொன்றையே தஞ்சமென்றிருப் பார்க்குப் பரமபதம் ஸித்தமென்றும், † இங்கும் அங்கும் ஆசாரிய * னிட்ட வழக்காயிருக்கு மென்றும் கையிலங்கு நெல்லிக்கனிபோல் நன்கு விளங்கும்.

தொடரும்.

ரெ. இராமையங்கார்,
தலைமைத் தமிழாசிரியர்,
ஸௌராஷ்ட்ர ஹைஸ்கூல்,
மதுரை.

ஸ்ரீ:

புண்ய பாப நிரூபணம்.

உலகத்திலுள்ளாரனைவரும், 'எமக்குச் சுகமுண்டாகுக; துக்க மொழிக' என்று விரும்புகிறார்கள். 'இவர்கள் விரும்பிய அப்பொழுதே சுகம் வரக்காணுமையோடு அபேக்ஷிக்கப்படாத துக்கம் வருகின்றதினுல் இவற்றிற்குக் காரணமாயிருப்பன எவையேனுமிருக்க வேண்டுமென்று ஊகிக்கக்கிடக்கிறது. இவ்வாராய்ச்சியால் தெளியுமிடத்து இவற்றிற்குக் காரணமாயிருப்பன புண்ணிய பாபங்களாமென்று வெளியாகும். "ஸுகாஸாதாரண காரணம் த⁴ர்ம:" "சுகாஸாதாரணகாரணம் தர்ம:" (சுகத்திற்கு எது அசாதாரண காரணமாகின்றதோ அது தர்மமெனப்படும்) என்பதனுலும், "து:க்காஸாதாரண காரணம் அத⁴ர்ம:" "துக்காஸாதாரண காரணம் அதர்ம:" (துக்கத்திற்கு எது அசாதாரணகாரணமாயிருக்கின்றதோ

---

† இங்கு—லீலாவிபூதி. (இவ்வுலகம்)
அங்கு—நித்யவிபூதி. (பரமபதம்)

* இட்டவழக்காயிருத்தலாவது—அவனது இஷ்டவினியோகத்திற்கு உரியனவாகை.

அது அதர்மமெனப்படும்) என்பதனுலுமறியலாம். இந்தப் புண்ணிய பாபங்கள் * யாகாதிகிரியைகளாலும், † கொடிய செயல்களாலும் உண்டாகின்றன. ஆக சுகதுக்கங்கட்குப் புண்ணியபாபங்களும் புண்ணியபாபங்கட்கு நற்செயல் தீச்செயல்களும் காரணங்களாகும். மேலும், ஜீவாத்மாவிடத்தில் புண்ணியபாபங்கள் சமவாயசம்பந்தத்தாலிருக்கின்றன. இவை ஜீவாத்மாவினும் வேறுன பிருதிவீ முதலிய திரவியங்களிலும், ஈசுவரனிடத்திலு மிருக்கமாட்டா.

இதுநிற்க; யாக முதலிய கிரியைகளும் கொடிய செயல்களும் § கிரியாவடிவினவாதலால் இவை உடனே நாசமாய் விடும். இங்ஙனம் நாசமாய் விடுகின்ற இவைகள், எவ்வளவோகாலங் கழிந்து புருஷன் மரணமான பிறகு ஸ்வர்க்க நரகங்களாகிய பலன்களைக் கொடுக்கின்றனவென்பது எவ்வாறு பொருந்தும்? காரணமென்பது காரியத்திற்கு நியதமாய் முன்னிற்க வேண்டுமன்றே வெனின்;

---

* "𑌯𑌾𑌗𑌜𑌨𑍍𑌯 𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑌜𑌨𑌕 𑌵𑍃𑌤𑍍𑌤𑌿 𑌗𑌣𑌤𑍍𑌵 𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌯 𑌜𑌾𑌤𑌿𑌮𑌾𑌨𑍍 𑌧𑌰𑍍𑌮𑌃" யாகஜந்ய ஸ்வர்க்கஜநக வ்ருத்தி குணத்வ வ்யாப்யஜாதிமாந் தர்ம:" இதன் பொருளாவது,— எவ்வஸ்து யாகத்தாலுண்டாவதும், ஸ்வர்க்கத்தினை யுண்டாக்குவதுமாகின்றதோ அவ்வஸ்துவிலிருப்பதும், குணத்தன்மை ஜாதியின் வ்யாப்யமுமாகிய ஜாதியாதோ அச்சாதியையுடைய குணம் தர்மமெனப்படும் என்பதாம். புருஷன் எப்பொழுது யாகம் தான முதலியவற்றைச் செய்கிருனே அப்பொழுது அவனிடத்தில் தர்மம் உண்டாகிறது. ஆதலால் தர்மம் யாகதானங்களாலுண்டாவதும், ஸ்வர்க்கத்தினையுண்டாக்குவதுமாம்.

† "𑌨𑌿𑌷𑌿𑌦𑍍𑌧 𑌕𑌰𑍍𑌮𑌜𑌨𑍍𑌯 𑌨𑌰𑌕𑌜𑌨𑌕 𑌵𑍃𑌤𑍍𑌤𑌿 𑌗𑌣𑌤𑍍𑌵 𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌯 𑌜𑌾𑌤𑌿𑌮𑌾𑌨𑍍 𑌅𑌧𑌰𑍍𑌮𑌃" "நிஷித்தகர்மஜந்ய நரகஜநக வ்ருத்தி குணத்வ வ்யாப்ய ஜாதிமாந் அதர்ம:" இதன் பொருளாவது—சாஸ்திரங்களால் கூடாதென்று விலக்கப்பட்ட ஹிம்ஸை முதலிய கர்மங்களால் உண்டானதும், நரகத்தையுண்டாக்குவதுமாகிய ஜாதியாதோ அச்சாதியையுடைய குணம் அதர்மமெனப்படுமென்பதாம். ஹிம்ஸை முதலிய நிஷித்தகர்மங்களால் ஜீவாத்மாவிடத்தில் அதர்மம் உண்டாகிறது. ஆதலால் அவ்வதர்மம், நிஷித்தகர்மத்தாலுண்டாவதும். நரகத்தினை யுண்டாக்குவதுமாம். அத்தகைய தர்மத்திலிருப்பதும், குணத்தன்மை ஜாதியின் வ்யாப்யமும் அதர்மத்தன்மை ஜாதியாம்.

§ கிரியையானது மூன்று க்ஷணம் வரை யிருந்து நாலாவது க்ஷணத்தில் நாசமாய் விடுமென்பது நூன் முடிவு.

இங்ஙனம் பொருந்தாமைக்காக புண்ணிய பாபங்கட்கு % வியாபாரத்தை ஒப்புக்கொள்ளவேண்டும். ஆனால் அக்கர்மங்களைச்செய்த கர்த்தாவாகிய ஜீவாத்மாவிடத்தில் அவ்வியாபாரம் கட்டுண்டிருக்கின்றதாதலால் பொருந்து மென்க; என்று தார்க்கிகர்கள் புண்ணிய பாபங்களை இவ்வாறு கூறுகிறார்கள்.

மீமாம்ஸகர்கள், யாகமுதலிய ஸத்கர்மங்ககள் புண்ணியமென்றும், சாஸ்த்திரங்களால் நிந்திக்கப்பட்ட கொடிய செயல்கள் பாபமென்றும் செல்லுகிறார்கள். இதனால் ஸத்கர்மங்களும், அஸத்கர்மங்களும் சுகதுக்கங்கட்குக் காரணங்களாமென ஒப்புக்கொள்ளவேண்டும். அழியுமியல்வினவாகிய இக்கர்மங்கள் காலங்கழிந்தநுபவிக்கப்படும் சுகதுக்கங்கட்குக் காரணங்களாமென்பது பொருந்தாதன்றேயெனின்; ஸத்கர்மத்திலும், அஸத்கர்மத்திலும் * அபூர்வம் என்ற ஓர்தர்மம் பிறக்கும். அத்தர்மம் † அதிருஷ்டரூபேண நின்று சுகதுக்கங்களை யுண்டுபண்ணுகின்றனவாதலால் பொருந்துமென்க; என்பர்.

% வியாபாரமாவது—அதனிற்றோன்றி, அதனிற்றோன்றற்பாலதனைத் தோற்றுவிப்பதாம். தண்டம் குடத்திற்குக்காரணம். தண்டத்தினுலுண்டாகும் சுழற்சி, வியாபாரம். இவ்வியாபாரமாகிய சுழற்சி, தண்டத்தில் தோன்றித் தண்டத்தினுலுண்டாகும் கடத்தைத் தோற்றுவிக்கும். அதுபோல இங்கு யாகாதிக்கிரியைகளிலும், கொடிய செயல்களிலும் புண்ணிய பாபங்கள் தோன்றி அக்கிரியைகளாலுண்டாகின்ற ஸ்வர்க்க நரகங்களை இவைகள் (புண்ணிய பாபங்கள்) தோற்றுவிக்கின்றனவாதலால் புண்ணிய பாபங்கள் வியாபாரங்களாம்.

* அபூர்வமாவது—கர்மத்தாலுண்டான ஒரு ஸம்ஸ்கார விசேஷம்.

பசுவானது கன்றை ஈன்றவுடன் அக்கன்றிற்கு முன்னொருவரும் பயிற்றுவிப்பாரின்றித் தானே பசுவின் மடுவில் வாயைவைத்துப் பாலை யருந்துகிறது. இக்கன்று பூர்வஜன்மத்திலும் ஒருதாயின் பாலை யருந்தி ஜீவித்த அநுபவத்தாலுண்டான ஸம்ஸ்காரம், அவ்வாத்மாவைப் பற்றி நின்று இந்த ஜன்மத்திலும் ஒருவரும் பயிற்றுவிப்பாரின்றித்தானே மடுவில் வாயை வைக்கும்படி நினைவுண்டாக்குகிறது. அந்நினைவுக்குக் காரணமாயிருப்பதே ஸம்ஸ்காரம். கர்மம் நாசமானாலும் அதினிடத்துண்டாகிய அபூர்வமென்ற தர்மம் நாசமாவதில்லை யென்பது.

† அதிருஷ்டமாவது—கர்மத்தாலுண்டான சக்தி விசேஷம்.

இனி, தார்க்கிகர்களும் முறையே கிரியைகளினின்றுமுண்டா வன புண்ணிய பாபங்களென்றும், கிரியாவடிவினவாயிருப்பன புண்ணிய பாபங்களென்றும் கூறுகின்றார்கள். இவர்கள் கூற்றை ஒப்புக்கொண்டால் அசேதனமாயும் கிரியாவடிவினதாயுமிருக்கின்ற புண்ணிய பாபங்கள் வியாபார வடிவினதாயும், அதிருஷ்டரூபமாயும் நின்று சுகதுக்கங்களை நுகரும்படி செய்கின்றனவென்று கொள்ள வேண்டிவரும். இவ்வாறு கொள்வது பொருந்தாது. ஏனென்றால் அசேதனத்திலிருக்கிற அசேதனத்வம் என்றதர்மமானது ஒவ்வொரு தேசகாலங்களோடு கூடிய பிரயோஜனத்தைத் தவறாது உண்டு பண்ணச் சாமர்த்யமில்லாமைக்கு ஹேதுவாயிருக்கும். கிரியையிலிருக்கின்ற கிரியாத்வம் என்ற தர்மமானது மூன்று க்ஷணம் வரை நிலைத்திருந்து நாலாவது க்ஷணத்தில் நாசமாதற்கு ஹேதுவாயிருக்கும். ஆதலால் இவை பலத்தைக் கொடுக்குமாற்றலுடையனவாகா. வாளால் மரத்தை வெட்டினான் என்ற விடத்தில் மரத்தை வெட்டுதற்கு வாள் கருவியாயிருப்பதுபோல புண்ணிய பாபங்கள் சுகதுக்கங்களையுண்டு பண்ணக் கருவியாயிருக்குமெனக் கொள்ளின் யாது குறையெனின்? வெட்டுதற்கு வாள் கருவியாயிருந்தாலும் ஒருவன் அதைக் கருவியாகக் கொள்ளாதபோது வாள் தானே மரத்தை வெட்டாதன்றோ? அதுபோல அசேதனவடிவினவாயிருக்கின்ற புண்ணிய பாபங்கள் பலத்தைக் கொடுக்கும் சக்தியுடையனவாகா.

பின்னை, புண்ணிய பாபங்கள் தாம் எவையெனின்? ஈசுவரனது இஷ்டம் புண்ணியம்; அவனது அநிஷ்டம் பாபமெனக்கொள்ள வேண்டும். இதுபற்றியே கூரத்தாழ்வானும் "யத்த்வத் ப்ரியம் ததிஹ புண்யம், அபுண்யம் அந்யத்" "யத்த்வத் ப்ரியம் ததிஹ புண்யம், அபுண்யம் அந்யத்" என்று அருளிச்செய்தார். மணவாளமாமுநிகளும், "பாபங்களாகின்றன குப்பையில் ஆமணக்குப் போலே எழுந்து, பாம்புபோலே மிடற்றைப்பிடிப்பதொன்றன்றிறே. சேதனன் பண்ணின கர்மங்கள் க்ஷணத்வம்ஸிகளாகையாலே அப்போதே நசித்துப்போம்; அஜ்ஞனாகையாலே கர்த்தாவான இவனு மறந்துபோக ஸ்வதஸ்ஸர்வஜ்ஞனாய் ஒன்றொழியாமல்உணர்ந்திருந்து ப்ராப்தகாலங்களிலே சிறுத்தநுபவிப்பிக்கிற என்னுடைய நிக்ரஹ

ரூபமாகையாலே அந்த நிக்ரஹபலமாய் வந்தவை" என்று அருளிச் செய்தார்.

புண்ணிய பாபங்கள் ஈசுவரனுடைய இஷ்டாநிஷ்ட ரூபங்களாயிருக்குமாகில், ஜீவனிடத்தில் அவற்றின் பலன்கள் எவ்வாறு வருமெனின்? தார்க்கிகர்கள் புண்ணிய பாபங்கட்கு வியாபாரம் ஒப்புக்கொண்டது போல ஈசுவரனுடைய இஷ்டாநிஷ்ட வடிவினவாகிய இவைகட்கும் வியாபாரம் ஒப்புக்கொள்ளவேண்டும். இஷ்டாநிஷ்டம், ஈசுவரனிடத்தில் தோன்றி அவனிடத்தில் தோன்றுவனவாகிய ஜீவனது பலன்களைத் தோற்றுவிக்கும். இதனால், ஒருவன் ஸத்கர்மத்தைச்செய்வானாகில் அதை ஸர்வஜ்ஞன் அறிந்து அவனுக்கு அநுக்ரஹ பலமாகிய சுகத்தைக் கொடுக்கிறான் என்பதும், தீய செயலைச் செய்வானாகில் அதை அவனறிந்து, செய்தவனுக்கு நிக்ரஹ பலமாகிய துக்கத்தைக் கொடுக்கிறானென்பதும் வெளியாகின்றன.

"𑌧𑌰𑍍𑌮𑌿𑌕𑌲𑍍𑌪𑌨𑌾𑌤𑍋𑌵𑌰𑌂 𑌧𑌰𑍍𑌮𑌕𑌲𑍍𑌪𑌨𑌾" "தர்மி கல்பநா தோவரம் தர்ம கல்பநா" (ஒருபொருளை இயைத்துக் கூறுவதற்குத் தர்மியைக் கல்பிப்பதைக்காட்டிலும் தர்மத்தைக் கல்பிப்பது சிறப்புடைத்தாம்) என்ற நியாயத்தால் ஜீவனுக்குச் சுகதுக்கங்களை நுகர்விப்பான் ஸர்வேசுவரனென்று தர்மியைக் கல்பிப்பதைக் காட்டிலும், சுகதுக்கங்களை நுகர்விப்பது அபூர்வமென்ற தர்மமாம் என்று மீமாம்ஸகர் கல்பிப்பதுபோல ஈண்டுக் கூறுவது நலமன்றோவெனின்; ஸர்வேசுவரன் வேதத்தால் சொல்லப்பட்ட நித்யப் பொருளாதலால் அவன் கல்ப்யனுகான். ஆகையால் இவர்கள் கொண்ட நியாயம் இங்குப் பொருந்ாதென்க. அசேதனமாகிய அபூர்வமென்ற தர்மம் சுகதுக்கங்களை நுகர்விக்கின்றதென்பது எவ்வகையாலும் பொருந்தாதாதலால் அறிவாற்றலுடைய ஸர்வேசுவரனே சுகதுக்கங்களை நுகர்விக்கின்றானென்று கொள்வதே சாலப் பொருத்தமுண்டத்தாம்.

மேலும், புண்ணிய பாபங்கள் ஈசுவரனுடைய இஷ்டாநிஷ்ட ரூபங்களாயிருக்குமென்று நிரூபித்தபடியால் இவை குட முதலியவைகளிலுள்ள குடத்வஜாதிபோல தேசகாலங்களில் மாறுபடாதிருக்குமியல்பினையுடையதில்லை. இஷ்டாநிஷ்டங்கள் தேசகால

அதிகாரிபேதத்தாலே வேறுபட்டிருக்குமாகையால் தேசகால அதிகாரிகளின் வேறுபாட்டைப்பற்றப் புண்ணியமாயிருப்பது பாபமாயும், பாபமாயிருப்பது புண்ணியமாயுமிருக்கும். ஆதலால் பகவதிஷ்டத்வம் புண்ணிய லக்ஷணம்;. அநிஷ்டத்வம் பாபலக்ஷணம் என்று கொள்வதே இயைபுடைத்து.

இங்குரைக்கப்பெற்ற புண்ணிய பாப லக்ஷணங்களுக்குஹபாத விருத்தாந்தத்திலியைத்து விரிவாக வுரைக்கப்பெறும்:—

பரதாழ்வான், கேகயதேசத்திலிருந்துவந்தவுடன் தம்தாயாகிய கைகேயி செய்த வஞ்சனையால் இராமபிரான் வனஞ்செல்லலுற்றதறிந்து அடங்காக்கோபங்கொண்டு, தம்மன்னையையும், மற்றுமுள்ளவர்களையும் சீறி, 'இனி இந்த ராஜ்யத்தை ஒருபொழுதும் ஆட்சிபுரியேன்; இப்பொழுதே இராமபிரானை அழைத்துக்கொண்டு வந்து ஸிம்ஹாஸநத்தில் வீற்றிருக்கச் செய்து, அவர் திருவடியின் கீழொதுங்கி அவர் உகந்த கைங்கர்யத்தைச் செய்யக்கடவேன்' என்று அயோத்தியிலுள்ளாரனைவரையும் அழைத்துக்கொண்டு இராமபிரான் இருக்குமிடம் நோக்கிச் செல்லலுற்றார். செல்லுமிடத்து, 'இராமபிரான் ஒருவன் வருந்தமுற்றுக் கண்ணீர் விடின் அதுகண்டு சகியாத தயாளுவன்றே! இத்தனை பேருமிரங்கினல் இவ்விரக்கத்தைக் கண்டு மறுத்துவராதிரார்' என்று தனக்குள் கருதிக்கொண்டு சித்திரகூடத்திலெழுந்தருளியிருந்த இராமபிரான் சந்நிதியை அடைந்து அவரைநோக்கி, கைகேயிபால் அடாப்பழியை ஏற்றவனும், தேவரீருக்குத் தாஸனுமான என் விஷயத்தில் அநுக்ரஹஞ் செய்யவேண்டும்; மூத்தவராயும் ராஜ்யத்தை தாங்குமாற்றலுடையவராயுமிருக்கிற தேவரீர் ராஜ்யத்தை ஏற்றுக்கொண்டு அன்பர்களுடைய வேண்டுதலை நிறைவேற்றுவீராக' என்று கண்ணீர் விட்டு, சரணாகத சாஸ்த்ர விதிப்படி ராமபிரான் திருவடியை வணங்கினர்.

அப்பொழுது இராமபிரான், பரதாழ்வானை நோக்கி நற்குடிப்பிறப்பும் நற்குணமும் நல்லொழுக்கமும் நற்கீர்த்தியும் வாய்ந்த நீ நான் செய்த பிரதிக்ஞையைக் கெடுப்பதாகிய பாபத்தைச் செய்யலாமா? தாய் தந்தையரின் நியமனத்தைப்பெற்று வனமடைந்திருக்கின்ற யான் அவர்களின் கட்டளையை மீறி நடப்பது நலமாகுமா?

நீ அயோத்தியிலிருந்து அரசு புரியவும் யான் மரவுரி யுடுத்து வனவாசஞ் செய்யவும் விதித்துவிட்டன்றோ கீர்த்திவாய்ந்த நம் தந்தையார் சொர்க்கமடைந்தார். அவர் கட்டளையின்படி பதினான்கு வருஷம் வனவாசஞ் செய்து விட்டுப் பின்னர் அரசுரிமையை ஏற்றுக் கொள்வேனென்று கூறினர்.

இவ்வுரையைக் கேட்ட பரதாழ்வான் பலவாறு வேண்டிக் கொண்டும் இராமபிரான் இரங்காதிருப்பதைக்கண்டு சுமந்திரரை நோக்கி இந்த விடத்தில் விரைவாகத் தர்ப்பையைக் கொணர்ந்து பரப்புவீர்; தலைவராகிய ராமபிரான் என் விஷயத்தில் க்ருபைசெய்யாதிருக்கும் வரையில் அவரை யெங்கும் போக வொட்டேன்; பொருளற்ற ப்ராஹ்மணனைப்போல் உணவின்றி முகமெடுத்துப் பாராதவனாய்ப் பர்ணசாலையின் முன்னே படுத்துக்கொண்டிருக்கப் போகிறேன் என்றனர். இதைக் கேட்ட சுமந்திரர் குறிப்பறியுமவராகையால் பரதாழ்வன் செய்கிற ப்ராயோபவேசம் இராமபிரான் திருவுள்ளத்திற்கு உகப்பில்லை யென்பதறிந்து பேசாமலிருந்தனர்.

பின்னர் பரதாழ்வான் துக்கமுற்றவராய், தர்ப்பையைத் தானே விரித்துக் கொண்டு ப்ராயோபவேசம் செய்யத் தொடங்கினர். இச்செயலைக்கண்டு இராமபிரான் மனக்கலக்க முற்று பரதாழ்வானைக் குறித்து சேஷியான (தலைவனான) எனக்கு அடிமையாயிருப்பாரை இஷ்டப்படி அடிமை கொள்ளுதல் முறையன்றென்று அடிமையாயிருக்கின்ற உன் ஸ்வரூபத்துக்கிசைந்ததாய் எனக்கு † அதிக்கிரமமாயிருக்கின்ற ப்ராயோபவேசத்தாலே எனக்கு நேர்ந்த முறைகேட்டை விலக்கிக்கொள்ள நினைக்கிறாயோ? என்று ப்ராயோபவேசத்தின் முறையின்மையை யெடுத்துரைத்தனர். மேலும் ப்ராஹ்மணனன்றோ ப்ராயோபவேசம் செய்யத் தகுந்தவனாவான். முடிசூடற்குரியனாயிருக்கின்ற உனக்கு இந்தச் செயல் சிறிதும் தகாது. இவ்வாறு அடாத காரியத்தைச் செய்த நீ ப்ராயச்சித்தமாக ஜலத்தைத்தொட்டு என்னையும் தொடுவாயாக வென்றனர்.

இவ்வுரைகளை யெல்லாம் கேட்ட பரதாழ்வான் தான் செய்யும் செயல் பெருமாள் திருவுள்ளத்திற்குப் பொருத்தமில்லை யென்பதை

† அதிக்கிரமம்—மீறிநடவாமை.

யுணர்ந்து ப்ராயோபவேசத்தை ஒழித்து இராமபிரான் நியமித்தபடி ப்ராயச்சித்தமும் செய்துகொண்டனர்.

இங்கே ஆராயத்தக்க விஷயம் பலவுண்டு அவை வருமாறு:— பரதாழ்வான் அயோத்தியை விட்டுப் புறப்பட்ட காலந்தொடங்கி ஆர்த்தி அதிகரிக்கப் பெற்று, சாஸ்திர முறைதப்பாமல் ப்ரபத்திரூப மான ப்ராயோபவேசத்தைச்செய்தார். இந்த ஆர்த்தரூபப்ப்ரபத்திக்கு பலம் உடனே உண்டென்பது சாஸ்திர சம்மதம். மிக்க பக்தியின் வசப்பட்டு எச்செயலைச்செய்யினும் அதற்குப் பிராயச்சித்தமு மில்லை. இஃதல்லாமலும் இராமபிரான் சேதுபந்தனத்தை முன் னிட்டுத் தானே சமுத்திரத்தை நோக்கிப் பிராயோபவேசம் செய் தார், அச்செயலை நல்லொழுக்கத்திற் சிறந்த பரதாழ்வான் செய்ய லாகாதென்று தடைசெய்தது பெரிதும் பொருத்தமில்லை. இங்ஙு னம் இயைபின்மை பலகாணப்படுகின்றன.

இவற்றிற்கு இனியுரைப்பதே சமாதானமாகக் கொள்ளத்தக் கது. அது வருமாறு:—

இராமபிரான் ஸர்வலோகங்கட்கும் சரண்யனாயிருக்கின்றமையை * வேடன் ¶ வேட்டுவச்சி † பக்ஷி % குரங்கு § ராக்ஷஸன் முதலான வர் மூலமாக வெளியிடவேண்டுமென்று திருவுள்ளம் பற்றினான். இங்ஙனம் திருவுள்ளம் பற்றியதற்கு வனவாசம் பொருத்தமுடைய தாயும், அரசாட்சி பொருத்தமற்றதாயுமிருந்தன. அப்பொழுது பரதாழ்வான் செய்த ப்ரபத்தி வனவாசத்திற்குத் தடையாயிருந்த தினால், இராமபிரான் 'இது செய்யலாகாது; இதற்குப் பிராயச்சித்தம் செய்துகொள்' என்று பலகூறித்தடுத்தான். அதுசமயம் பரதாழ் வான் தான் செய்தகார்யம் முறையுடையதென்பதறிந்தும் அவன் திருவுள்ளத்தோடு பொருந்தாமைகண்டு தடுத்தற் கிசைந்தனர்.

---

* வேடன்—குஹப்பெருமாள்.

¶ வேட்டுவச்சி—சபரி.

† பக்ஷி—காகாசுரன்.

% குரங்கு—சுக்ரீவன்.

§ ராக்ஷஸன்—விபீஷணாழ்வான்.

இதனுல் எத்துணைச்சிறப்புடைய ப்ரவர்த்தியும் அவன் திருவுள்ளத்தோடு பொருந்தாதபோது கார்யஸித்தியாகாதென்பதும், அதனுல் அவனுடைய இஷ்டமே புண்ணியமென்பதும் வெளியாயின.

இனி, குஹப்பெருமாள் விருத்தாந்தமு முரைக்கப் பெறும்:—

* ஏழையேதலன்கீழ்மகனென்னுதிரங்கிமற்றவர்க்கின்னருள்சுரந்து
மாழைமான்மடநோக்கியுன்தோழியும்பியெம்பியென்றொழிந்திலையுகந்து
தோழன்நீயெனக்கிங்கொழியென்றசொற்கள்வந்தடியேன்மனத்திருந்திட
ஆழிவண்ணநின்னடியிணையடைந்தேன்அணிபொழில்திருவரங்கத்தம்மானே

---

* ஏழை—விஷயங்களில் சபலபுத்தியுடையவன். விஷயங்களில் விருப்பும் அஜ்ஞாநகார்யமாதலால் இது அறிவின்மையை யுணர்த்தும். ஏதலன்—சத்ரு. இதனுல் ஒழுக்கமின்மை பெறப்படும். கீழ்மகன்—(அறிவொழுக்கமின்மையை ஆபரணமாகக்கொண்டுள்ள) இழிந்த ஜன்மத்தை யுடையவன். என்னுதிரங்கி—என்று ஆராயாமல் இரக்கமுற்று. இன்னருள்—இனியவருளை. தனக்குப்பிரயோஜனமாகச்செய்த அருளாதலால் இன்னருளென்ருர். சுரந்து—(அணுகிநின்ற கன்றிற்குப் பசு பால் சுரப்பது போல) குணங்களைச் சுரந்து. மாழைமான்மடநோக்கி—இளையமான் போன்ற மருண்ட நோக்கையுடைய சீதை. பிராட்டி காருண்யரூபையாதலால் பெருமாளைக் காண வந்த குஹப்பெருமாளைப் பெருமாள் கடாக்ஷிப்பதற்கு முன்பு, பிறந்தகத்துத் தோழன்மார் வந்ததாகக் கடாக்ஷித்துப் பின்னர் பெருமாளை அங்கீகார ஹேதுவாகவும் அழகாகவும் ஸாபிப்ராயமாகவும் பார்க்க (இத்தனை குறைவாளனை அங்கீகரியாதொழிவதென்? என்று பார்க்க) இக்குறிப்பறிந்த பெருமாள் 'மாழைமான் மடநோக்கி உன்தோழி' என்ருர். சீல குணத்தால் உனக்கு ஸ்வாமிநி என்னுது 'உன் தோழி' என்ருர். சீரியார் அடிமை செய்வாரையும் அண்ணு, ஆய்ச்சிஎன்பரன்ருே! உம்பி எம்பி—உன் தம்பி என் தம்பி. பெருமாள் எவரேனுமொருவரை அங்கீகரித்தால் அவரை இளையபெருமாள் பெருமாளாகவே கருதுவாராதலால், இங்கு அவர் கருத்தால் உம்பி எம்பி என்ருர். “𑌭𑌕𑍍𑌤𑌿𑌰𑌷𑍍𑌟𑌵𑌿𑌧𑌾𑌹𑍍𑌯𑍇𑌷𑌾 𑌯𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌮𑍍𑌲𑍇𑌚𑍍𑌛𑍇𑌽𑌪𑌿 𑌵𑌰𑍍𑌤𑌤𑍇, 𑌤𑌸𑍍𑌮𑍈 𑌦𑍇𑌯𑌂 𑌤𑌤𑍋 𑌗𑍍𑌰𑌾𑌹𑍍𑌯𑌂 𑌸𑌚𑌪𑍂𑌜𑍍𑌯𑍋 𑌯𑌥𑌾𑌹𑍍𑌯𑌹𑌮𑍍”, “பக்திரஷ்டவிதாஹ்யேஷா யஸ்மிந்ம்லேச்சேபி வர்த்ததே, தஸ்மைதேயம் ததோக்ராஹ்யம் ஸசபூஜ்யோ யதாஹ்யஹம்” ஈசுவரபக்தியிற் சிறந்தார் இழிந்தவரேனும் அவர் பூஜிக்கத்தக்கவரென்று பிரமாணமிருப்பதால் இளையபெருமாள் குஹப்பெருமாளை எம்பெருமானேடொப்பவராக நினைத்தார், பரமபதத்திலும் “பதியினில் பாங்கினில் பாதங்கள் கழுவினர்” என்றபடி சம்சாரத்தினின்றும் ஒருவன் முக்தனுய்ச் சென்ருல் நித்யஸூரிகள் அவரது ஸ்ரீபாதங்களை விளக்கி ஆதரிப்பார்களன்ருே! இங்கு 'உன் தோழி' என்ற

இப்பாசுரத்தால், அறிவொழுக்கமற்ற குஹப்பெருமாள் நிலை கண்ட இராமபிரான், இரக்கமுற்று 'இவரது தோஷங்களை நம் வாத்ஸல்யாதி குணங்கட்கு விஷயமாக்குவோம்' என்று தம்மோடொத்த குலத்தினராகக் கருதி அளவளாவி உரையாடினரென்ப துரைக்கப்படுகிறது.

தனுலும், 'உம்பி' என்றதனுலும் வைஷ்ணவாங்கீகாரம் பண்ணிக்கொடுத்தபடி. எம்பெருமான் ஒருவனை அங்கீகரிக்கும்போது அடியார்க் காட்படுத்தி அதன்பின்பன்றே தானுதரிப்பது. 'அடியார்க்கென்னையாட்படுத்த விமலன்' என்பதும் இதனை வலியுறுத்தும். என்று ஒழிந்திலை—இவ்வளவில் விட்டிலை. பிராட்டியைத் தோழி யென்றும், இளையபெருமாளை உம்பி என்றுங் கூறிய அர்த்த பலத்தால் தம்முடைய தோழமை வித்திக்குமதையுமாராயாது 'உகந்து தோழன் நீ எனக்கு' என்றார். இங்ஙனம் ஆராயாதுரைப்பதற்கு அன்பின் மிகுதியே காரணமென்பார் 'உகந்து' என்றார்.

மேலும், 'உன் தோழி' என்பதற்கேற்ப உன் தோழன் என்பதே பொருத்தமுடையதாம். அவ்வாறுரைக்காமல் 'தோழன் நீ எனக்கு' என்றதனுல் தமக்குள்ள தோழமை ஒருபொருளாகத் தோன்றவில்லை யென்பதும், குஹப்பெருமாள் தம்மைத் தோழமை கொண்டதையே பெருமையாகக் கருதினரென்பதும் வெளியாகின்றன. இவ்வாறு பெருமாள் தோழமை பாராட்டியதைக்கண்ட குஹப்பெருமாள் இளையபெருமாளைப் போலத் தொடர்ந்தடிமைசெய்யப் புறப்பட்டனர். அப்பொழுது பெருமாள் 'இங்கொழி' என்றார். அவர் பின்தொடர்ந்து வந்தால் துணையாகக் கூட்டிக்கொண்டு செல்லாமல் 'ஒழி' என்று விலக்கியது தோழமைக்குக் குறைவன்றோ வென்னில்; "படைவீடு கெடாமைக்கு ஒருவனை (பாதனை) வைத்தோம்; வழியடி கெடாதபடி அங்கே யிரும்' என்பது பெருமாள் கருத்தாதலால் குறையன்றென்க. இங்கே வழியடி என்பதற்கு வழிப்பறிப்பு என்றும், வழிப்பிரிவென்றும் இரண்டு பொருள் கொள்ளவேண்டும். இந்த இரண்டு பொருளுக்கும் இரண்டு முக்ய கருத்துண்டு. அவையாவன:—

பாதனுக்கு க்ஷத்திரிய தர்மத்திற்கேற்ற ராஜ்யபரிபாலனம் நமக்கிஷ்டமாயிருப்பதுபோல உம்முடைய குலதர்மத்திற்கேற்ற வழிப்பறிப்பும் நமக்கிஷ்டமாயிருப்பதால் பாதனை ஆட்சிபுரிதற்கேற்ற அயோத்தியில் நாம் வைக்க இருக்கிறுப்போல நீவிரும் உம்முடைய குலத்திற் கேற்ற வழிப்பறி முதலிய செயலைச் செய்தற்குரிய இந்தச் சிருங்கிபேரபுரத்திலே நாம் வைக்கவிருந்து அதுகெடாதபடி பரிபாலனஞ் செய்து கொண்டிருப்பீர் என்பதும், யான் சென்ற பின்பு திருவயோத்தியிலிருந்து என்னைக்காண வருமவர்கட்கு யான் சென்ற வழி தடுமாறுமல் என்னிடத்திற்கு வருமாறு காட்டிக்கொண்டு

இங்கு இராமபிரான் குஹப்பெருமாளை மிகவும் உகந்து அங்கீகரித்ததற்கு அவரிடத்திலுள்ள தோஷங்களே காரணமாகவிருந்தனவேயன்றிப் பிறிதில்லை. தோஷங்களை யுபகாரமாகக்கொண்டு அங்கீகரித்தல் கூடுமோவென்னில்? இங்குத் தோஷங்களே பகவதிஷ்டமாயிருந்தமையாற் கூடுமென்க. "தோஷத்தையும், குணஹாநியையும் பார்த்து உபேக்ஷியாதவளவன்றிக்கே அங்கீகாரத்துக்கு அவைதன்னையே பச்சையாக்குகை" என்று லோகதேசிகன் அருளிச்செய்ததும் இங்கறியத்தக்கது.

(1) 𑌯𑌦𑌿𑌹𑍍𑌯𑌹𑌂 𑌨𑌵𑌰𑍍𑌤𑍇𑌯𑌂 𑌜𑌾𑌤𑍁𑌕𑌰𑍍𑌮𑌣𑍍𑌯 𑌤𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌤𑌃 ।
𑌮𑌮𑌵𑌰𑍍𑌤𑍍𑌮𑌾𑌨𑍁 𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤𑍇 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌃 𑌪𑌾𑌰𑍍𑌥 𑌸𑌰𑍍𑌵𑌶𑌃

யதிஹ்யாஹம் நவர்த்தேயம் ஜாதுகர்மண்ய தந்த்ரிய:
மமவர்த்மாநு வர்த்தந்தே மநுஷ்யா: பார்த்த ஸர்வச:

(2) 𑌉𑌤𑍍𑌸𑍀𑌦𑍇𑌯𑍁 𑌰𑌿𑌮𑍇𑌲𑍋𑌕𑌾 𑌨𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌂 𑌕𑌰𑍍𑌮𑌚𑍇𑌦𑌹𑌂 ।
𑌸𑌂𑌕𑌰𑌸𑍍𑌯𑌚 𑌕𑌰𑍍𑌤𑌾𑌸𑍍𑌯𑌾 𑌮𑍁𑌪𑌹𑌨𑍍𑌯𑌾 𑌮𑌿𑌮𑌾𑌃 𑌪𑍍𑌰𑌜𑌾𑌃 ॥

உத்ஸீதேயு ரிமேலோகா நகுர்யாம் கர்மசேதஹம்
ஸங்கரஸ்யச கர்த்தாஸ்யா முபஹ்ந்யா மிமா: ப்ரஜா:

என்று இங்ஙன மருளிச்செய்த கண்ணபிரான் தானே மரியாதை கடந்து ராஸக்கிரீடையில் முயன்று நின்றான். அப்பொழுது கோபிமார்கள் தம்மிருமுதுகுரவர் சொற் கடந்து, கண்ணபிரானோடு கூடி

இவ்விடத்தில் இருக்கக்கடவீர் என்பதும் பெருமாளுடைய அபிப்பிராயங்களாம்.

என்ற சொற்கள்—என்ற பாசுரம், வந்து—கர்ணபரம்பரையாக வந்தி, அடியேன் மனத்திருந்திட—அடியேன் மனத்தில் வேரூன்றிக்கிடக்க, ஆதி வண்ணா—கடல் போன்ற நிறமுற்ற திருமேனியையுடையவனே, நின்னடி இணையடைந்தேன்—தேவரீர் திருவடிகளைத் தஞ்சமாக வடைந்தேன், அணி பொழில் திருவரங்கத்தம்மானே—அழகிய சோலை சூழ்ந்த திருவரங்கத்தில் எழுந்தருளியிருக்கிற எம்பெருமானே என்பதாம்.

(1—2) ஸர்வேசுவரனும் ஸத்யஸங்கல்பனும் கீனவுமாத்திரத்தால் ஜகத்தினது ஆக்கல் அளித்தல் அழித்தல்களை விளையாட்டாகச் செய்பவனுயிருக்கிற யான், லோகோபகாரமாக என் இச்சையாலே மனுஷ்யனாக வசு

நின்றூர்கள். இவர்களது முறையற்ற செயலெல்லாம் 'ஈசுவர இஷ்டத்வமாகிற புண்ய லக்ஷணத்தின்சார்பாய் விளங்கியதுபோல குஹப்பெருமாளிடத்திலுள்ள தோஷமும் ஸ்வதந்த்ரரான பெருமாளுக்கு இஷ்டமாகையாலே புண்ணியத்தின் பாற்படுமென்னக் குறையில்லை.

புண்ணிய பாபங்கள் ஈசுவரனுடைய இஷ்டாநிஷ்ட ரூபங்களென்றும், புண்ணிய பாப பலன்களை ஈசுவரனே கொடுக்கின்றானென்றும் கொள்ளாதபோது "பரதாழ்வானுக்கு நன்மை தானே தீமையாயிற்று; குஹப்பெருமாளுக்குத் தீமை தானே நன்மையாயிற்று" என்று இதிஹாஸத்தை உட்கொண்டு லோகதேசிகன் அருளிய வாக்யங்கள், நீர் நெருப்பாயிற்று, நெருப்பு நீராயிற்று என்பனபோல் பொருளற்றனவாயொழியும். ஆகையால் பரதாழ்வான் செய்த நன்மை, பலத்தைக் கொடுப்பவனுகிய எம்பெருமானுக்கிஷ்டமற்றதாயிருந்ததினுல் அது தீமையாயிற்று. குஹப்பெருமாளிடத்திலுள்ள தீமை, பலத்தைக்கொடுப்பவனுகிய அவனுக்கிஷ்டமாயிருந்ததினுல் நன்மையாயிற்றென்று கொள்ளவேண்டும்.

தார்க்கிகர்களும், மீமாம்ஸகர்களும் சொல்லுகிறபடி (தர்மாதர்மங்களாகிய) வியாபாரத்திற்கும், அபூர்வத்திற்கும் பலத்தைக் கொடுக்கும் ஆற்றலுள்ளனவென்று கொண்டால் பரதாழ்வான் செய்த நன்மைக்கு நற்பலனும் குஹப்பெருமாளிடத்திலுள்ள

தேவர் திருமாளிகையில் அவதரித்தேனதலால் அந்தக்குலத்திற்கேற்றகர்மங்களைச் சோம்பலில்லாமல் எப்பொழுதும் நான் செய்யாதொழிவேனுகில் "சிஷ்ட ஜனங்களில் தலைவரான வசுதேவர் மைந்தன் கண்ணன் சென்ற வழியே நமக்கும் வழியாகக் கடவது' என்று நினைத்து எல்லாமறிந்து கொள்ளாத சில சிஷ்டர்கள் அதையே அநுஸரிப்பார்கள். அப்பொழுது தாம் செய்யவேண்டிய கர்மங்களைச் செய்யாமையாலே ஆத்மாவை யடையாதவர்களாய் நரகத்திற்காளாகி நிற்பார்களன்றே! நான் சாஸ்திரத்திற் சொல்லப்பட்ட ஆசாரத்தைப் பரிபாலனஞ் செய்யாததினுல் சிஷ்டர்களுக்கும் வர்ணுசிரமாசாரங்களின் கலப்பைச் செய்து அவர்களை யெல்லாம் அழித்தவனுவேன். ஆகையால் சிறந்தோனுகிய பாண்டுவின்புத்திரனுய், தர்மன் தம்பியாய் அர்ச்சுனன் என்று பிரஸித்தனுயிருக்கிற நீயும் ஜ்ஞாநநிஷ்டையில் மாத்திரம் இழிவாயாகில், சில சிஷ்டர்கள் உன் ஆசாரத்தையே அநுசரித்துத் தமக்கேற்ற கர்மத்தில் நில்லாமல் நசித்துப் போவார்கள். ஆதலால் எத்துணைச் சிறந்தோனுயினும் கர்மமே செய்யக்கடவன்.

தீமைக்குக் கெட்டபலனும் அவசியமுண்டாயிருக்கவேண்டுமன்றே! அங்ஙன முண்டாகக் காணுமையால் அசேதனங்களாகிய அவைகள் (அபூர்வாதிகள்) பலத்தைக்கொடுக்கு மாற்றலுடையனவாகாவென் றும், புண்ணிய பாபங்கள் ஈசுவரனுடைய இஷ்டாநிஷ்ட ஸ்வரூபங் களென்றும், பலன்களைக் கொடுப்பவன் ஈசுவரனே யென்றும் தெளி வாயின.

ஸ்ரீ:

நசிகேதோபாக்யானம்.

[மதுரை ஸம்ஸ்க்ருத காலேஜ் ந்யாய வேதாந்த வித்வான் ஸ்ரீ. உ. வே. ஸ்ரீநிவாஸகோபாலாசார்ய ஸ்வாமீ எழுதுவது.]

(307-ம் பக்கத் தொடர்ச்சி.)

நசிகேதஸ்ஸே! பதினொருவாயிலையுடைய ஒரு க்ஷேத்திரத் திற்கு அதிஷ்டாதாவாயிருக்கிற ஆத்மா, பிராரப்தமாகிய கர்மத்தை “ஹொமெநத்விதரெ க்ஷபயிதா்வா ஸம்பத்யதெ” “போகேநத்வ தரே க்ஷபயித்வாத ஸம்பத்யதே” என்றபடி அநுபவித்து விட்டு முடிவில் அர்ச்சராதிகதியை யடைந்து விரஜையில் மூழ்கி, கர்ம வாஸநாரேணுக்களைக் கழித்துப் பரமபதத்தை யடைகின்றான். இவ னிடத்திலும் பரமாத்மா அந்தராத்மாவாயிருக்கிறானென்று அறிந்து கொள்வாயாக.

க்ரீஷ்மருதுவில் (ஆனி, ஆடி மாதங்களில்) சிறந்த கிரணங்க ளோடு விளங்குகின்ற சூரியனுக்கும், ஆகாயமுதல் எங்கும் சஞ்சரிக் கின்ற வாயுவுக்கும், யஜ்ஞவேதிகையில் (திண்ணையில்) விளங்குகின்ற ஹோமாக்நிக்கும், கிருஹத்தில் விளங்குகின்ற அதிதிக்கும், மனுஷ் யசரீரத்திலிருக்கின்ற ஜீவாத்மாவுக்கும் சிறந்த வேதங்கட்கும் ஸத்யலோகத்திற்கும், பரமபதத்திற்கும், ஜலத்தில் தோன்றுகின்ற வஸ்துவுக்கும், பூமியில் தோன்றுகிற வஸ்துவுக்கும், யாகாதி கர் மாவாலடையத்தக்க ஸ்வர்க்கத்திற்கும் பர்வதங்களிலுண்டாகின்ற

பொருள்கட்கும் அளவிடவொண்ணாத ஸத்ய ஸ்வரூபனான பரமாத்வே அந்தர்யாமியாய் விளங்குகின்றான்.

எல்லா ஜீவர்களின் ஹ்ருதயத்திலுள்ள பரமாத்மா பிராண வாயுவை உயரச்செல்லுமாறும் அபான வாயுவை அதோமுகமாகச் செல்லுமாறும் செய்துகொண்டு ஸத்வநிஷ்டர்களாகிய பெரியோர்களால் துதிக்கப்பட்டவனுமிருக்கிறான். பிராணவாயு அபானவாயுக்களால் ஜீவர்கள் ஜீவிக்கிறார்கள் என்று கருதவேண்டா. அந்தப் பிராணன்கட்கும் அந்தராத்மாவாய் விளங்குகின்ற பரமாத்மாவினாலே ஜீவர்கள் ஜீவிக்கிறார்கள்.

நசிகேதஸ்ஸே! மிகவும் ரஹஸ்யப்பொருளாயும், ஸநாதனமாயுமுள்ள பிரம்ம விஷயத்தில் துவேஷ முதலிய துர்க்குணமற்று மோக்ஷத்தில் விருப்பமுற்று உபதேசயோக்யனாயுள்ள உன் நிமித்தமாக மறுமுறையுஞ் சொல்லுகிறேன்; கேட்பாயாக:—

பரமாத்ம தத்வத்தை யறிதற்குப் பெரியார்வாயிலாகக் கேட்கவேண்டுமென்பதில் சிறிதும் கவலையற்றவர்களாயும், உன்னோடு ஒரு வகையானும் ஒப்பில்லாதவர்களாயுமிருக்கிற ஜீவர்கள் அவரவர் செய்த கர்மத்திற்குத் தகுதியாக மனுஷ்யாதி ஜன்மத்தையடைகிறார்களென்று சிஷ்யனாகிய நசிகேதஸ்ஸுக்கு உத்ஸாகமுண்டாகுமாறு கூறி, மேலும் உபதேசிக்கத்தொடங்கினான்—

எல்லா ஜீவர்களும் லயமடைந்திருக்கின்ற காலத்தில் எவன் தன் ஸத்யஸங்கல்பத்தாலே எல்லாவற்றையுஞ் சிருஷ்டிக்கின்றானோ அவனே மற்றொருவனதினத்திற்கு அடங்காதவனும், எல்லாவற்றையும் விளங்கச் செய்பவனும், எல்லாராலுமடையப்படுமவனும், உபாதியற்றவனுமிருப்பான். இவனுக்கு ஒத்தாருமிக்காருமில்லை.

அக்னி என்ற ஒருவனே அண்டத்திலும் அண்டத்திற்கப்பாலுள்ள லோகங்களிலும் பலவடிவுகளைப்பற்றி நின்று பல்வேறு வகையாகத் தோன்றுவதுபோலவும், வாயு ஒருவனே சரீரங்களிலும், வேறிடங்களிலும் பல்வேறுவகையாக விளங்குவது போலவும், சேதனா சேதனங்களில் வெவ்வேறு வகையினனாய் அந்தர்யாமியாய் விளங்குகிறான்.

சூரியன், சக்ஷுரிந்திரிய வடிவினனுயிருந்து வஸ்துக்களைக் கிரஹித்தாலும் கண்ணிற்குள்ள தோஷங்கள் சூரியனைச்சார்வதில்லை. அதுபோலப் பரமாத்மா சேதனுசேதனங்களில் அந்தர்யாமியாயிருந்தாலும் அவற்றிலுள்ள சுகதுக்கங்களும் தேய்தல் வளர்தல் முதலிய தோஷங்களும் அவனைச்சாரமாட்டா.

இத்தகைய பரமாத்மாவைப் பரிசுத்தமான ஹ்ருதயத்தையுடைய உன்னைப்போன்றவர்கள் கையிலங்கு நெல்லிக்கனிபோல நன்கறிவார்கள். அவனைக் கிரஹிப்பதற்கு ஸாமர்த்யமற்ற மனத்தினையுடைய என்னைப்போன்றவர்கள் எவ்வாறறிய முடியும்? சூரியன் சந்திரன் நக்ஷத்திரம் மின்னல் அக்னி முதலிய ஒளியுடைய பொருள்கள் பரமாத்மா முன்னிலையில் எங்ஙனம் பிரகாசிக்கும்? இவையெல்லாம் சூர்யனெதிர்ப்பட்டமின்மினிபோல அவன் சந்நிதியில் ஒளிமழுங்கி விடுமன்றே! அவன் அநுப்ரவேசசக்தியால் * இவை ஒளியுடன் விளங்குகின்றன.

எவனுடைய ஆக்ஞைக்குப்பயந்து அக்னி சூரியன் இந்திரன் முதலிய பாலகர்கள் அவரவர்க்குரிய கார்யங்களைச் சரிவரச் செய்து வருகிறார்களோ அவ்வாஜ்ஞையையுடையவனே பரமாத்மாவென்றறிவாயாக. சரீரேந்திரியங்கள் தோன்றியழியுமியல்பின. இவ்வாறு தோன்றியழியுமியல்பு பிர்ம்மத்திற்கில்லையென்று தீரர்களாயுள்ள பெரியோர்கள் நன்குணர்ந்து அவனையே உபாஸித்துச் சோகத்தினின்றும் விடுபடுகிறார்கள்.

---

* "𑌯𑌦𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑌗𑌤𑌂 𑌤𑍇𑌜𑍋 𑌜𑌗𑌦𑍍𑌭𑌾𑌸𑌯𑌤𑍇𑌽𑌖𑌿𑌲𑌮𑍍 ।
𑌯𑌚𑍍𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌮𑌸𑌿 𑌯𑌚𑍍𑌚𑌾𑌗𑍍𑌨𑍌 𑌤𑌤𑍍𑌤𑍇𑌜𑍋 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌮𑌾𑌮𑌕𑌮𑍍 ॥ (கீதை)

𑌅𑌖𑌿𑌲𑌜𑌗𑌦𑌵𑌭𑌾𑌸𑌕𑌮𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 𑌯𑌤𑍍𑌤𑍇𑌜𑌃
𑌤𑌤𑍍𑌤𑍈𑌰𑌾𑌰𑌾𑌧𑌿𑌤𑍇𑌨 𑌮𑌯𑌾 𑌤𑍇𑌭𑍍𑌯𑍋 𑌦𑌤𑍍𑌤𑌮𑌿𑌤𑌿 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿
(கீதாபாஷ்யம்)

(இ-ள்) எல்லா உலகத்திற்கும் பிரகாசத்தைக்கொடுக்கின்ற சூரியன்முதலானுரின் ஒளிகளெல்லாம் என்னுடையனவே. அவர்கட்கு இந்தத் தேஜஸ் எவ்வாறு கிடைத்ததென்றால்; அவர்களால் ஆராதிக்கப்பட்டு அதனால் யான் திருப்தனுகி அவர்கட்குத் தேஜஸ்ஸைக் கொடுத்தேன்; (எ-று.)

ஸர்வேசுவரன் எங்கும் நிறைந்து விளங்குபவனுதலால் குறிப்பிட்டு இன்னரூபமுடையவனென்று சொல்வதற்கியலாது. இதனுல் இவன் சக்ஷுர் (கண்) இந்திரியத்திற்குத் தோற்றமாட்டான் என்கிறூர்கள். ஆனுலும் நீங்காத பக்தியுடையவர்கள் அவனைத் தியானஞ் செய்து அவனது ஸ்வரூபத்தை நன்கறிகிறூர்கள். அத்யவஸாயம் அபிமானம் சிந்தா என்ற விர்த்தி பேதத்தால் மனம் ஒன்றே புத்தி அஹங்காரம் சித்தம் என்ற சொற்களால் வியவஹரிக்கப்படுகிறது. அத்தகைய மனத்துடன் இந்திரியங்களையுஞ் சேர்த்து நிலைபெறச் செய்வதை பரமாகதி யென்ற யோகமாகச் சொல்லுகிறூர்கள். இந்த யோகம் கைகூடப் பெற்றவர்கட்குப் பரமாத்மா சுலபமாக அறியப் படுவான். வேதாந்த வாக்யங்களால் நிச்சயிக்கப்பட்ட பரமாத்மா ஒருவன் உண்டென்பதில் விசுவாசமுடைய மனமே பிர்ம்மத்தை மனன நிதித்யாஸஞ் செய்யத்தக்கதாகுமென்கிறூர்கள்.

கெட்ட விஷயங்களைக்கொண்ட மனேகல்பனைகள் எப்பொழுது நாசமாகின்றனவோ அப்பொழுதே உபாஸகனுப் பிர்ம்மாநுபவத்தை யடைகிறூன். விருப்பு வெறுப்புகளென்கிற அவிழ்க்கவொண்ணுத முடிச்சை எவன் அவிழ்க்கிறூனே அவனே உபாஸகரில் தலைவனுவான். உபாஸகர்கட்கு உபதேசிக்கத்தக்கவை இவையே யாம்.

சரீரத்தில் முக்யமாகவிருக்கின்ற நாடிகள் நூற்றென்றும். அவற்றுள் ஸுஷும்நா என்ற பெயரையுடைய நாடியின் வழியாகச் செல்பவனே அர்ச்சராதிமார்க்கமாகச் சென்று பிர்ம்மஸாரூப்யத்தைப்பெற்றுப் பிர்ம்மாநுபவத்தை யடைகிறூன். மற்ற நாடிகளின் வழியாகச் செல்பவன் ஸம்ஸாரத்திற்கிடந்துழல்கிறூன்.

நசிகேதஸ்ஸே! முடிவாகச் சொல்லுகிறேன். கேட்பாயாக:- எல்லாருடைய ஹ்ருதயத்திலும் அந்தராத்மாவாய் விளங்குகின்றவனே ஸமஸ்தவஸ்து விலக்ஷணனுவானென்று ஆன்றோர் உரைப்பர். அவர்களால் உரைக்கப்பட்டவனே என்றும் அழிவில்லாத பிரம்மமாவானென்றறிவாயாக.

இங்ஙனம் உபதேசிக்கப்பட்டவனுகிய நசிகேதஸ் தருமனையே பரமாசார்யனுகப்பற்றி வந்தனை வழிபாடுகள்செய்து, பிர்ம்மஜ்ஞானியாகி அர்ச்சராதிமார்க்கமாகப்பரமபதமடைந்துபிர்ம்மாநந்தமுற்றூன்.

இந்த உபாக்யானத்தை விசுவாசத்தோடு பயின்றவர்களும், கேட்டவர்களும் யமன் வசப்படாமல் என்றும் அழிவில்லாத உத்தமமான பதத்தைப்பெற்று இன்புறுவார்கள்.

முற்றுப்பெற்றது.

ஸ்ரீ:

அர்ச்சாவதார வைபவம்.

(313-ம் பக்கத் தொடர்ச்சி.)

ப்ரபத்தியானது நிவர்த்தி மார்க்கமாதலால் அது வேதத்தில் சில விடங்களில் மிகச் சுருக்கமாகவும், ரஹஸ்யமாகவும் விதிக்கப்பட்டுளது. இதனாலும் அர்ச்சாராதனமும் விதிக்கப்பட்டதாக யாவரும் நிராக்ஷேபமாக ஒப்புக்கொள்வதற்குக் கடமைப்பட்டவாராவார்கள். எவ்வாறெனின்; இந்தநிவர்த்தி மார்க்கத்தைக் கைக்கொண்டவன் சரணாகதி செய்யும்போது *. ப்ரயதபாணியா யிருத்தல் வேண்டுமென்று விதித்துளது. இப்படி ப்ரயதபாணியாயிருக்க வேண்டு மெனவே சரணாகதியை ஏற்றுக்கொள்பவன் அந்தர்யாமியாயுள்ள எம்பெருமானென்றேனும், பரமபதத்திலுள்ள எம்பெருமானென்றேனும் கொள்வதற்கிடமில்லை. கண்ணிற்கு விஷயமாயுள்ள எம்பெருமானையே கொள்ள வேண்டும். கண்ணுக்கு விஷயமாயுள்ள எம்பெருமான் விபவாவதார (ராமகிருஷ்ணாத்யவதார) எம்பெருமானும், அர்ச்சாவதார எம்பெருமானுமாம். விபவாவதார எம்பெருமான் பெருக்காறுபோல ஒருகாலத்தில் தோன்றி மறைந்தமையால் இப்பொழுது அவ்வெம்பெருமானிடத்தில் சரணாகதி செய்வதற்கியலாது. ஆதலால் எப்பொழுதும் கண்ணால் கண்டு பற்றுதற்குரிய அர்ச்சாவதார எம்பெருமானிடத்திலே ப்ரபத்தி செய்ய வேண்டு மென்று ஏற்படுகிறது.

---

* ப்ரயதபாணியாய்—உபஹாரத்தைக் கொண்டகையனாய். உபஹாரமாவது—ஆராதனைக்குரிய புஷ்பம் பழ முதலிய திரவியங்களாம்.

மேலும் "ப்ரஹ்மணேத்வா மஹஸோமித்யாத்மாநம் யுஞ்ஜீத" "ப்ரஹ்மணேத்வா மஹஸேத்வாத்மாநம் யுஞ்ஜீத" தேஜோரூபியான பிர்ம்மத்தினிடத்தில் ப்ரணவங்கொண்டு ஆத்ம ஸமர்ப்பணஞ் செய்ய வேண்டும் என்று சொல்லப்பட்டது. ப்ரணவத்தால் தேஜோரூபியான பிர்ம்மத்தை உத்தேசித்து ஆத்ம ஸமர்ப்பணஞ் செய்ய வேண்டுமென்பது பெறப்பட்டது. இங்கு மிருந்த தேஜஸ்ஸோடு கூடிய பிர்ம்ம மென்பது விக்ரஹத்தோடு கூடிய பிரம்மத்தையே குறிப்பிடும். விக்ரஹமில்லாத ஸ்வரூபத்தை மாத்திரங்குறிப்பிடாது. சரணாகதிக்கு ஸ்வரூபமாத்திரம் விஷயமாகாது. விக்ரஹத்தோடு கூடிய வஸ்துவேதான் விஷயமாகும். ஆகையாலன்றோ "மாமேகம் ஶரணம் வ்ரஜ" "மாமேகம் சரணம் வ்ரஜ" என்றும், "மாமேவ ஶரணம் ப்ராப்ய" "மாமேவ சரணம் ப்ராப்ய" என்றும், "மாமேவயே ப்ரபத்யந்தே" "மாமேவயே ப்ரபத்யந்தே" என்றும் கீதாசார்யனாகிய கண்ணபிரானும் விக்ரஹத்தோடு கூடிய ஸ்வரூபத்தையே சரணாகதிக்கு விஷயமாகக் காட்டியருளினான்.

இங்குக் குறிப்பிடப்பெற்ற ப்ரமாணத்தின்படி விக்ரஹத்தோடு கூடிய எம்பெருமானே சரணாகதிக்கு விஷயமாகக் கொண்டாலும் நிரவதிக தேஜோ ரூபமாகிய அப்ராகிருத தேஜஸ் அர்ச்சாவிக்ரஹத்திற்கு ஒப்புக்கொள்வதெங்ஙனம்? அர்ச்சா விக்ரஹம் நாம் ஏறியருளப் பண்ணியதால் பிராகிருதமேயாகு மென்று கருதவேண்டா. பராசரஸம்ஹிதையில் † "அர்ச்சாபி லௌகிகாஸா ஸததம் பாவிதாத்மநாம், மந்த்ரமந்த்ரேச்வர ந்யாஸாத் ஸாபிஷாட்குண்ய விக்ரஹா" "அர்ச்சாபி லௌகிகாஸா பகவத் பாவிதாத்மநாம், மந்த்ரமந்த்ரேச்வர ந்யாஸாத் ஸாபிஷாட்குண்ய விக்ரஹா" என்று சொல்லப்பட்டது. இதனால் நிரவதிக தேஜஸ் அர்ச்சைக்குண்டென்பது தெளிவு.

---

† இதன் பொருளாவது—எம்பெருமானை இடைவிடாது பாவனை செய்வதால் பக்குவமான மனத்தையுடைய மஹாத்மாக்கள் மந்த்ரந்யாஸத்தோடு மந்த்ரத்தால் சொல்லப்பட்ட தேவதையை அர்ச்சாபிம்பத்தில் நியாஸஞ் செய்திருப்பதால் (வைத்திருப்பதால்) அர்ச்சாவிக்ரஹம் ப்ராகிருதமாய்த் தோற்றினாலும் ஆறுகுணங்களோடு விளங்குகின்ற அப்ராகிருத விக்ரஹமேயாம் என்பதாம்.

அந்தச் சிறந்த ஒளியானது பிரத்யக்ஷமாகாமையால் கண்ணுக்குத் தோற்றாது. விபவத்திலும் இப்படியே வெளிப்படையாக் அப்ராகிருத ஒளி தோற்றுவதில்லை. இதுபற்றியே கண்ணபிரான் அர்ச்சுனனை நோக்கி ‹‹நதுமாம்ஶக்யஸெ த்ரஷ்டு மநெநைவ ஸ்வசக்ஷுஷா, திவ்யம் ததாமிதெசக்ஷுஃ›› “நதுமாம்சக்ஷ்யஸே த்ருஷ்டு மநேநைவஸ்வசக்ஷுஷா திவ்யம் ததாமிதேசக்ஷு:” இந்தப்பிராகிருதமான கண்ணைக்கொண்டு உள்ளபடி என்னுடைய ரூபத்தை உன்னால் பார்க்க முடியாது; ஆதலால் அந்த அப்ராகிருத ரூபத்தைக் காணுதற்குரிய திவ்யமான கண்ணைத் தருகிறேனென்று அருளிச்செய்தான். இதனாலும் நன்கறியலாம்.

இவ்வாறு அப்ராகிருதமான தேஜஸ்ஸோடு கூடிய விக்ரஹம் கண்ணுக்கு விஷயமாகாதென்பதைக் குறித்தே வேதத்தில் ‹‹நசக்ஷுஷாபஶ்யதி கஶ்சநைநம்›› “நசக்ஷுஷாபச்யதிகச்சனைநம்” (ஒருவனும் கண்ணால் பார்த்தவனில்லை) என்று சொல்லியது. வேதத்தில்அர்ச்சாவிதிக்கு விஷயமுண்டென்று ஒப்புக்கொண்டாலும் புஷ்ப முதலிய வஸ்துக்களைக்கொண்டு ஆராதிக்கவேண்டு மென்பதற்குப் பிரமாண முண்டோவென்னில்; முன்பு ‘ப்ரயதபாணி’ என்றதனால் புஷ்பாதிகளைக் கொண்டாராதிக்கவேண்டுமென்பது பெறப்பட்டது.

எவ்வாறு சொல்லி அர்ச்சாராதனம் செய்யத் தக்கதென்று நிருபித்தாலும் அர்ச்சாராதனத்தில் ஒருதோஷத்தை மாத்திரம் அவசியமொப்புக்கொள்ள வேண்டும். அஃதாவது- ஆராதனைக்கு முக்யமாக துளசி முதலியன வேண்டும். துளசியைக் கிள்ளுவதாலும், புஷ்பத்தைப்பறிப்பதாலும் அந்த உயிர்ச் செடிகட்கு ஹிம்ஸை உண்டாகுமன்றோ! உயிர் ஹிம்ஸை செய்தார்க்கு மறுமையில் அநிஷ்டபலமே ஸித்திக்குமென்பது நிச்சயம். மறுமையில் அநிஷ்டப் பிரயோஜனமுண்டாவதற்குக் காரணமாயிருக்கும் செய்கையனைத்தையும் சாஸ்திரம் நிந்தித்துரைக்கும். ‹‹மாஹிம்ஸ்யாத் ஸர்வாபூதாநி›› “மாஹிம்ஸ்யாத் ஸர்வாபூதாநி” என்று ஒரு உயிரையும் ஹிம்ஸிக்கலாகாதென்று சாஸ்திர முறையிடுவதையுங் காணலாம். ஆக இவற்றையெல்லாம் ஆராய்ந்து பார்க்கும்போது அர்ச்சாராதனத்தில் உயிர் ஹிம்ஸையுண்டாகக் காண்கின்றமையால் இதுவும் செய்வதற்குரித்

தன்றென்றுதானே விலக்க வேண்டியதாயிருக்கிறதெனின்; அற்றன்று. 'ஒரு ஜீவனையும் ஹிம்ஸிக்கலாகாது' என்ற பொது விதியானது "അഗ്നീഷോമീയം പശുമാലഭേത" "அக்நீஷோமீயம் பசுமாலபேத" என்று யாகத்தில் பசு ஹிம்ஸையைக்கூறிய சிறப்புவிதி ஒழிந்தவிடங்களில் மாத்திரம் செல்லும். பொதுவிதி சிறப்புவிதியைச் கண்டிக்காதன்றே! இதுபற்றியே பிர்ம்மமீமாம்ஸையில் "അശുദ്ധമിതി ചേന്ന ശബ്ദാത്" "அசுத்தமிதி சேந்நசப்தாத்" (யாகத்தில் பசு ஹிம்ஸை அசுத்தமாகாது; ப்ரமாண மின்மையால்) என்று சொல்லப்பட்டது. மேலும் யாக கர்த்தாவானவன் பசுவை நோக்கி "ന വാ ഉ ഏതന്മ്രിയസേ ന രിഷ്യസി" "நவாஏதந்ம்ருயஸே நரிஷ்யஸே" (என்னால் கொல்லப்படுகின்றாயில்லை; நீயுஞ் சாக்காடடைகின்றாயில்லை) என்று சொல்வதுபோல இங்கும் "ക്ഷമസ്വ ദേവി തുളസി യന്മയാംഗേഷു ഛിദ്യസേ, ഏവം ന രിഷ്യസേ വിഷ്ണോഃ പാദമൂലം ഗമിഷ്യസി" "க்ஷமஸ்வதேவீ துளஸி யந்மயாங்கேஷு ச்சித்யஸே, ஏவம் நரிஷ்யஸே விஷ்ணோ: பாதமூலங்கமிஷ்யஸி" (துளஸி தேவீ! என்னுடைய அங்கங்களினால் கிள்ளப்படுகிறாய்; அதைப் பொறுத்துக் கொள்ள வேண்டும்; நீ இதனால் நசிப்பதில்லை; எம்பெருமானுடைய திருவடியை அடைகிறாய்) என்று துளசியை நோக்கிப் பிரார்த்திப்பதாக வசனமிருப்பதால் இச்செயல் ஹிம்ஸையாகிய பாதகத்திற் சார்வதில்லை. மேலும் வேத மந்த்ரத்தில் "நரிஷ்யஸே" என்ற பதம் துளசி பிரார்த்தனையிலும் அமைந்திருக்கிற ஒற்றுமை பாராட்டத்தக்கது,

இது நிற்க, "യത്ത്വത്പ്രിയം തദിഹ പുണ്യം അപുണ്യമന്യത്" "யத்த்வத்ப்ரியம் ததிஹ புண்யம் அபுண்யம் அந்யத்" என்று எம்பெருமானுக்கு எது பிரியமோ அதுவே புண்ணியம்; மற்றது பாபமென்று அருளிச்செய்தார்கள். ஆதலால் ஆராதனமானது ஆராத்ய வஸ்துவாகிய எம்பெருமானுகப்புக்கு ஹேதுவாயிருக்குமென்பது யாவருமறிந்ததொன்றாதலால் அந்த ஆராதனத்திற்கு, அங்கமான துளசியைக் கிள்ளுதல் முதலியனவும் அவனுகப்பிற்கேதுவாயிருக்குமென்பதில் தடையில்லை.

தொடரும்.

344

ஸ்ரீ:

நன்கொடை.

அறிவொழுக்கங்களிற் சிறந்த ஆன்றோர் பலரின் இன்னுரைகளைக்கொண்டு மாந்தரின் மனமாசகற்றி ஞானவொளியைத் தருகின்ற நம் திவாகரம் நீடூழிவாழுமாறு பல பெரியார்கள் பொருளுதவி புரிந்து, ஆதரித்து வருவதை யாவருமறிவர். அம்முறையில் கீழ்க் குறிப்பிடப்பெற்றவர்களும் ஜீவித சந்தாதார்களாகச் சேர்ந்துள்ளார்கள். இவர்கள் செய்த நன்றி எழுமையுமறக்கற்பாலதன்று. இவர்கள் ஒன்றுலொரு குறைவின்றி நன்னிலையுற்று வாழுமாறு, எல்லாம்வல்ல எம்பெருமானைப் பிரார்த்திக்கிறோம். இவர்கள் உபகரித்ததுபோல இன்னும் பலரும் உபகரிக்குமாறு வேண்டுகிறோம்.

ஸ்ரீ. உ. வே. K. ஸ்ரீநிவாஸையங்கார் ஸ்வாமி B. A; B. L. புத்தூர் திருச்சி ரூ	25
,, A. S. கிருஷ்ணையங்கார் ஸ்வாமி வானமாமலை	25
ஸ்ரீமாந் C. குழந்தைவேலு முதலியாரவர்கள் சென்னை ...	25
ஸ்ரீமதி கௌசலையம்மாள் தளவாய்பட்டணம். ...	25

சென்னை பென்ரோஸ் & Co. புரோப்ரைட்டர்,
ஸ்ரீமாந் விஜயராகவலு நாயுடுகாரு வரவு.
6-வது வருஷ அறிக்கைப் பத்திரம்
அச்சிட்டுக்கொடுத்த வகையில் ... 8—8—0